THE HINDU

Today's Paper » Tamil Nadu » Sivaganga

Published: Friday, Jan 29, 2010

## Students told to know strides in bioinformatics

Special Correspondent

SIVAGANGA: A three-day national workshop on "Application on Molecular Modelling and Structural Bioinformatics" organised by the Department of Bioinformatics, Alagappa University, Karaikudi in association with SCHRODINGER, USA, began at Karaikudi on Wednesday.

In her welcome address, A. Shenbagavalli, Registrar in-charge, stressed that students should equip themselves to update the recent developments in Bioinformatics and they had to strengthen their creativity in thinking and learning so that they could update the recent developments in life sciences.

She further said that the recent developments in Bioinformatics were the felt need for the development of molecular modelling and drug discovery.

S. Sudalaimuthu, Member of Syndicate, who presided over the function, said that the efforts made by the Vice-Chancellor, P. Ramasamy, in establishing four new departments in life sciences, viz., Animal Health and Management, Bioinformatics, Biosensors and Bioelectronics and Nanoscience and Technology was appreciable.

It would strengthen research activities in the emerging fields of life sciences in the Alagappa University.

### Molecular modelling

In his keynote address Mukesh Doble, Department of Biotechnology, Indian Institute of Technology, Madras, said that the importance of the molecular modelling in drug discovery and design have been felt by scientists and others.

There was a need for human expertise to make use of computational tools in drug discovery and the significance of computer aided drug discovery that could help in the design and development of better and safer drugs for treatment of all diseases of mankind.

### Objective of the workshop

R. Raghu, Director, Business Development, Schrodinger, USA, said that the objective of the workshop was to provide hands-on-training to the faculty members, scholars and scientists across the university in the emerging new areas of science and technology in the field of bioinformatics with emphasis on drug discovery and design.

M. Selvam, Member of Syndicate, Sanjeev Kumar Singh, Head (in-charge), Department of Bioinformatics and others spoke.

**2010**

2 THE NEW INDIAN EXPRESS
WEDNESDAY, DECEMBER 22 | 2010 | MADURAI

## *Market for biotech products grows by 25 pc annually: IIT Prof*

Express News Service
Karaikudi, December 21

BIOINFORMATICS was an essential component of biotechnology research. In 2009-10, domestic market for biotechnology products amounted to Rs 158 crore while the export component was Rs 73.9 crore.

The market for biotechnology products was growing at the rate of 25 percent every year, said Mukesh Doble, of the Industrial Institute of Technology, Chennai, here on Monday.

He was delivering the keynote address at the inaugural function of the third national symposium-cum-workshop on 'Recent trends in structural bioinformatics and computer aided drug design,' organised by the Department of Bioinformatics of Alagappa University, sponsored by the Central Department of Biotechnology, New Delhi, and Tamil Nadu State Council for Science and Technology. Doble said that bioinformatics helps to bring out new drugs within a short period of time.

Vice-Chancellor of the University S Sudalaimuthu who presided said that bioinformatics was a field of biology concerned with the development of techniques for collection and manipulation of biological data and use of such data for making biological discoveries or predictions. D Velmurugan, HoD of Crystallography and Biophysics, University of Madras, in his inaugural address, said that bioinformatics becomes a globally important subject in order to develop specific packages for potential drug in the days to come to meet new diseases.

S Karutha Pandian, Dean (Research) of the University, said that new drugs and modification of existing drugs for infectious diseases, become essential due to saturation in drug discovery. Indian pharmaceutical sector should fully utilize the existing marine resources for developing new drugs for infectious diseases.

C Sanjeevaraja, member of the syndicate, V Veluraja of MSM University, and others felicitated. V Manickavasagam, Controller of Examination, P Prema, R Krishnaraj, members of the syndicate participated. J Jeyakanthan welcomed and Sanjeev Kumar Singh proposed a vote of thanks.

# ஆன்மீகம் சார்ந்த கல்வி அவசியம்

## துணைவேந்தர் பேச்சு

காரைக்குடி, ஜன. 18:மாணவர்களுக்கு சமுதாய ஈடுபாட்டை உருவாக்க ஆன்மீகம் சார்ந்த கல்வி அவசியம் என, அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் சேதுசுடலைமுத்து தெரிவித்துள்ளார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியியல் துறை மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் தேசிய இளைஞர் தினவிழா கொண்டாப்பட்டது. உயிரி தகவலியியல் துறைத்தலைவர் ஜெயகாந்தன் வரவேற்றார். தேர்வாணையர் மாணிக்கவாசகம், ஆட்சிக்குழு உறுப்பினர் கிருஷ்ணராஜ், திருப்பராய்துறை ராமகிருஷ்ணா தபோவனம் சுவாமி சந்திரசேகரானந்தா, கோவை பாரதியார் பல்கலைக் கழக மேலாண்மையியல் துறைத்தலைவர் வெங்கடபதி கலந்துகொண்டனர்.

தலைமை வகித்து துணைவேந்தர் சேதுசுடலைமுத்து பேசியதாவது:

அழகப்பா பல்கலைக் கழகத்தில் ஆண்டு முழுவதும் 40க்கும் மேற்பட்ட தேசிய மற்றும் பன்னாட்டு விழா க்கள் நடத்தப்படுகின்றன. நாட்டில் அதிகளவில் இளைஞர்கள் உள்ளனர். நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒவ்வொரு இளைஞர்களின் பங்கு அவசியம். மாணவர்களுக்கு ஆன்மீகம் சார்ந்த கல்வி, கல்வி அறிவை தருவதோடு, அவர்களுக்கு சமுதாய ஈடுபாட்டை வளர்க்க உதவும். இன்றைய இளைஞர்கள் விவேகானந்தர் வழியில் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு வாழ்வில் முன்னேற வேண்டும்.

தன்னம்பிக்கை, வலிமை, ஒழுக்கம், போன்ற உயர்ந்த குணங்கள் இளைஞர்களிடம் உருவாக வேண்டும். அறிவியல் மற்றும் பொருளாதாரம் மட்டுமே மக்களின் பிரச்னைகளை தீர்த்துவிடாது. மக்களிடம் மனிதநேயம் வளர வேண்டும். மனிதநேயம்தான் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் என பேசினார். என் எஸ் எஸ் ஒருங்கிணைப்பாளர் குருமூர்த்தி நன்றி கூறினார்.

தினமலர் மதுரை 23-12-201

# கருத்தரங்கு

காரைக்குடி: அழகப்பா பல்கலை உயிரி தகவலியல் துறை சார்பில் 'உயிரி தகவலியல், கம்ப்யூட்டர் வழியியல் மருந்து வடிவமைப்பு' என்ற கருத்தரங்கு துவக்க விழா நடந்தது.

துறை தலைவர் ஜெயகாந்தன் வரவேற்றார். சென்னை பல்கலை உயிரி இயற்பியல் பேராசிரியர் வேல்முருகன் துவக்கி வைத்தார். துணை வேந்தர் சுடலைமுத்து பேசுகையில், "உயிரி தகவலியல் என்பது மூலக்கூறு உயிரியல் துறையில் தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வது. இத்துறை குறுகிய காலத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது," என்றார்.

சென்னை இந்திய தொழில்நுட்ப கழக பேராசிரியர் முகேஷ் டோப்லே, பேராசிரியர்கள் கருத்தப்பாண்டியன், சஞ்சீவிராஜா, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை பேராசிரியர் வேலு ராஜா, சிண்டிகேட் உறுப்பினர் பிரேமா, தேர்வாணையர் மாணிக்கவாசகம், வளர்ச்சி குழு உறுப்பினர் குருமூர்த்தி, தொலை நிலை கல்வி இயக்குனர் பாலச்சந்திரன் பங்கேற்றனர். பேராசிரியர் சஞ்சீவிகுமார் நன்றி கூறினார்.

தினகரன் 22.12.2010

### உயிர் தகவலியல் வளர்ச்சியால்

# இந்தியாவில் குறைந்த செலவில் மருந்துகள் கண்டுபிடிப்பு

காரைக்குடி டிச 22: இந்தியாவில் உயிர் தகவலியல் வளர்ச்சியால், மருந்து குறைவான செலவில் கண்டுபிடிக்கப்படுவதாக, இந்திய தொழில்நுட்பக் கழக அதிகாரி முகேஷ் டோப்லே தெரிவித்துள்ளார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில், உயிர் தகவலியல் மற்றும் கணினி வழியில் மருந்துகள் கண்டுபிடிப்பு என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு துவக்கவிழா நடைபெற்றது. துறை தலைவர் ஜெயகாந்தன் வரவேற்றார். தேர்வாணையர் மாணிக்கவாசகம், கல்லூரி வளர்ச்சி குழும டீன் குருமூர்த்தி, தொலைநிலைக்கல்வி இயக்குனர் பாலசந்திரன்,. உயிர் தொழில்நுட்பத்துறை டீன் கருத்த பாண்டியன், ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள் பிரேமா, கிருஷ்ணராஜ், சஞ்சீவிராஜா, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பேராசிரியர் வேலுராஜா ,பாண்டிச்சேரி பல்கலை ரகு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கை சென்னை பல்கலை உயிர் இயற்பியல் துறை பேராசிரியர் வேல்முருகன் துவக்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு தலைமைவகித்து துணைவேந்தர் சேதுகூடலை முத்துபேசுகையில்,"உயிரியியல் துறையில் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இத்துறை பயன்படுகிறது. உயிர்தகவலியல் துறை குறுகிய காலத்தில் வளர்ச்சி பெற்றுள்ளது. இத்துறை தற்பொழுது உயிர்தகவலியல் மற்றும் கணினி சார்ந்த மருந்துகள் வடிவமைப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளது,'' என்றார்.

இந்திய தொழில்நுட்பக் கழக அதிகாரி முகேஷ் டோப்லே பேசுகையில்,"உயிர் தொழில்நுட்ப வளர்ச்சியில், உயிர் தகவலியல் துறை பெரும் பங்காற்றி வருகிறது. 2009 முதல் 2010ம் ஆண்டில் உயிர் தொழில்நுட்பத் துறையால் உருவாக்கப்பட்ட பொருட்களுக்கு ரூ 158 கோடிவரை சந்தை வாய்ப்பு இருந்துள்ளது. இதன் ஏற்றுமதி மதிப்பு ரூ 73.9 கோடி. இத் துறையின் சந்தை வாய்ப்பு ஆண்டுக்கு 25 சதவீதம் இருக்கிறது. அமெரிக்காவில் ஒரு புதிய மருந்து கண்டுபிடிக்க 1.2 பில்லியன் டாலர் செலவாகிறது. இந்தியாவில் உயிர் தகவலியல் வளர்ச்சியின் காரணமாக மருந்து கண்டுபிடிப்பு குறைவான செலவில் குறுகிய காலத்தில் கண்டுபிடிக்கப்படுகிறது," என்றார்.

தினமணி

செவ்வாய்க்கிழமை, 21 டிசம்பர், 2010

# 'உயிர்தகவலியல் வளர்ச்சியால் குறைந்த செலவில் மருந்துகள் கண்டுபிடிப்பு'

காரைக்குடி, டிச. 20: இந்தியாவில் உயிர்தகவலியல் வளர்ச்சியால் குறைந்தசெலவில் விரைவான மருந்து கண்டுபிடிப்புகளுக்குச் சாத்தியமாகிறது என்று சென்னை இந்திய தொழில் நுட்பக் கழகப்பேராசிரியர் முகேஷ்டோப்லே தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம்ஸ காரைக்குடி அழகப்பா பல்கலை.யில் உயிர்தகவலியல் துறை சார்பில் புதுதில்லி மத்திய உயிர் தொழில்நுட்பத் துறை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பக் கழகம் ஆகியவற்றின் நிதிஉதவியுடன் உயிர்தகவலியல் மற்றும் கணினி வழியில் மருந்துகள் வடிவமைப்பு என்ற தலைப்பிலான 3 நாள் தேசியக்கருத்தரங்கில் அவர் பேசியது:

2009-10-ம் ஆண்டில் உயிர்தொழில்நுட்பத் துறையால் உருவாக்கப்பட்ட பொருள்களுக்கு ₹ 158 கோடி அளவுக்கு சந்தை வாய்ப்பு இருந்துள்ளது. இதற்கான ஏற்றுமதி மதிப்பு ₹ 73.9 கோடியாகும்.

உயிர்தொழில்நுட்பத் துறையின் சந்தை வாய்ப்பு ஓராண்டுக்கு 25 சதவீதமாக இருந்து வருகிறது. மருந்து வடிவமைப்புக்கும், கண்டுபிடிப்புக்கும் உயிர் தகவலியல் முக்கியத்துவம் பெறுகிறது.

அமெரிக்காவில் புதிய மருந்து ஒன்றை கண்டுபிடிக்க 1.2 பில்லியன் டாலர்கள் செலவாகின்றன. இந்தியாவில் உயிர்தகவலியல் வளர்ச்சிபெற்று வருவதால் மருந்து கண்டுபிடிப்புக்கான செலவும், காலமும் குறைவு என்றார்.

விழாவில் துணைவேந்தர் சேது. சுடலைமுத்து தலைமை வகித்துப் பேசுகையில், உயிர் தகவலியல் துறை குறுகியகாலத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. தற்போது கட்டமைப்பு பெற்று கணினி சார்ந்த மருந்துகள் வடிவமைப்பதில் உயிர்தகவலியல் மேல் நோக்கி வளர்ச்சியடைந்து வருகிறது என்றார்.



கருத்தரங்கத் துவக்க விழாவில் பேசுகிறார் அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் சேது.சுடலைமுத்து.

சென்னை பல்கலை. உயிர் இயற்பியல் துறை பேராசிரியர் டி. வேல்முருகன் கருத்தரங்கைத் தொடக்கிவைத்துப் பேசினார்.

அழகப்பா பல்கலை.யின் முதன்மையர் (ஆராய்ச்சி) மற்றும் உயிர்தொழில்நுட்பத் துறை பேராசிரியர் எஸ். கருத்தப்பாண்டியன் பேசுகையில், தொற்று நோய்களை கட்டுப்படுத்தவும், குணப்படுத்தவும் புதிய மருந்துகள் கண்டுபிடிப்பும், நடைமுறையில் உள்ள மருந்துகளை மேம்படுத்துவதும் இன்றைய தேவையாகும். மத்திய அரசு மருந்துத் துறை மருந்து நிறுவனங்கள் வளர்ச்சிக்கும், புதிய மருந்துகள் கண்டு பிடிப்புக்கும் ஆண்டுக்கு ₹ 5 ஆயிரம் கோடி முதல் ₹ 6 ஆயிரம் கோடிவரை செலவிடுகிறது. மருந்து உற்பத்தியைப் பொருத்தவரை நம்நாட்டு மருந்து உற்பத்தி நிறுவனங்கள் இந்திய கடல் வளங்களை பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றார்.

பல்கலை. ஆட்சிக்குழு உறுப்பினர் சீ. சஞ்சீவிராஜா, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை. பேராசிரியர் வி. வேலுராஜா, புதுச்சேரி பல்கலை. ஆர். அமுதா, ஆர்.ரகு உள்ளிட்டோர் பல்வேறு தலைப்புகளில் பேசினர்.

பல்கலை. ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பி.பிரேமா, ஆர்.கிருஷ்ணராஜ், தேர்வாணையர் வி.மாணிக்கவாசகம், கல்லூரி வளர்ச்சிக்குழும முதன்மையர் டி.ஆர்.குருமூர்த்தி, தொலைநிலைக்கல்வி இயக்குநர் வி.பாலச்சந்திரன் மற்றும் பேராசிரியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

பல்கலை. உயிர்தகவலியியல் துறைத் தலைவர் ஜெ. ஜெயகாந்தன் வரவேற்றார். இணைப் பேராசிரியர் சஞ்சீவகுமார்சிங் நன்றி கூறினார்.

தினத்தந்தி

22 மதுரை 22-12-2010



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் உயிரி தகவலியல் மற்றும் கணினி வழியில் மருந்துகள் வடிவமைப்பு என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு நடைபெற்ற போது எடுத்த படம்.

# கடல் வளங்களை மருந்து உற்பத்தி செய்ய பயன்படுத்த வேண்டும்

## பல்கலைக்கழக கருத்தரங்கில் வலியுறுத்தல்

காரைக்குடி,டிச.22-

கடல் வளங்களை மருந்து உற்பத்தி செய்ய மருந்து கம்பெனிகள் பயன் படுத்த வேண்டும் என்று பல்கலைக்கழக கருத் தரங்கில் வலியுறுத் தப் பட்டது.

### தேசிய கருத்தரங்கு

காரைக்குடி அழகப்பா பல் கலைக்கழகத்தில் உயிர் தகவலியல் மற்றும் கணினி வழியில் மருந்துகள் வடிவ மைப்பு என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கு பல்கலைக் கழக உயிர் தகவலியல் துறை சார்பில் புதுடெல்லி மத்திய அரசின் உயிர் தொழில்நுட்பத் துறை மற்றும் தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்ப கழகம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் நடந்தது.

கருத்தரங்கிற்கு துணைவேந்

மை தாங்கினார். சென்னை பல்கலைக்கழக உயிர் இயற் பியல் துறைபேராசிரியர்வேல் முருகன், இந்திய தொழில் நுட்பக்கழக பேராசிரியர் முகேஷ் டோப்லே முக்கிய உரையாற்றினர். பேராசிரியர் ஜெயகாந்தன் வரவேற்று பேசி னார்.

### புதிய மருந்து கண்டுபிடிப்பு

உயிர் தொழில்நுட்பத்துறை முதன்மையர் (ஆராய்ச்சி) பேராசிரியர் கருத்தப்பாண்டி யன் பேசும்போது, பெருகி வரும் தொற்றுநோய்களை குணப்படுத்துவதற்குரிய புதிய மருந்து கண்டுப்பிடிப்பதும், நடைமுறையில் இருக்கின்ற மருந்துக்களை மேம்படுத்து வதும், இன்றைய அடிப்படை தேவையாகும். இந்திய அரசின் மருந்துத்துறை மருந்து நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், புதிய மருந்துக்களை கண்டுப்

பிடிப் பதற்கும் ஆண்டுக்கு ரூ.5ஆயிரம் முதல் 6 ஆயிரம் கோடி வரைசெலவுசெய்கிறது இந்திய கடல் வளங்களை மருந்துகள் உற்பத்திக்கு நம் நாட்டு மருந்து கம்பெனிகள் பயன்படுத்திக்கொள் வேண்டும் என்று கூறினார்.

ஆட்சிமன்றக்குழு உறுப் பினர்கள் சஞ்சீவிராஜா, கிருஷ் ணராஜ், பிரேமா, மனோன் மணியம் சுந்தரனார் பல் கலைக்கழக பேராசிரியர் வேலுராஜா, பாண்டிச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் அமுதா, மற்றும் ரகு, சோடிஞ் சர், பல்கலைக்கழக தோ வாணையர் மாணிக்கவாசகம் வளர்ச்சிகுழும முதன்மையர் குருமூர்த்தி, தொலைநிலை கல்வி இயக்குனர் பாலச்ச திரன் மற்றும்பேராசிரியர்கள் கலந்துகொண்டனர். முடிவில் இணைபேராசிரியர் சஞ்சீ குமார் நன்றி கூறினார்.